# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் நடவடிக்கைகள், சென்னை-2
முன்னிலை : திரு.அசோக்டோங்ரே, இ.ஆ.ப.,

- - -

ந.க.எண் : 22019/2009சிபி

நாள் : 8.12.09.

பொருள்: தொகுப்பு குடியிருப்புக் கட்டிடம் - செங்கல்பட்டு மண்டலம், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், நல்லம்பாக்கம் முதல்நிலை ஊராட்சி மற்றும் கிராமம் சர்வே எண்.150/1A pt, 150/1Bpt, 1cpt,1D, 2pt, 3,4; 157/6, 7,8,9; 201/7Bpt, 8,9pt, 202/1pt 202/2; 204/1A, 1B, 2pt 7A,7B,8pt, 215/1, 2pt 216/1,2,3;217/1pt,2pt மற்றும் 218/1pt -ல் 51,820 சதுர மீட்டர் பரப்பு மனைக்கு ஒப்புதல் - Block Type 1 முதல்12 வரையில் மொத்தம் 46 Block -ல் 209 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு உபயோகக் கட்டிடம் கட்ட அனுமதி இசைவு குறித்து.

பார்வை :
1) மனுதாரர் திருவாளர்கள், யுனிடெக் லிமிடெட், சென்னை 46 அவர்கள் கடிதம் நாள் 1.10.2009
2) தலைவர், நல்லம்பாக்கம் முதல்நிலை ஊராட்சி மன்ற கடிதம் நாள் 9.10.09
3) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) செஙகல்பட்டு மண்டலம் அவர்கள் கடிதம் ந.க.எண்.3839/09செம7 நாள் 04.11.2009
4) அரசாணை (நிலை) எண் : 161வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் : 9.9.09.
5) நகர்ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் : 7486/09 பிஏ2 நாள் : 16.04.09.

- - - - -

<u>உத்திரவு :</u>

காஞ்சிபுரம் மாவட்டம்,செங்கல்பட்டு வட்டம், நல்லம்பாக்கம் முதல் நிலை ஊராட்சி மற்றும் கிராமம் சர்வே எண்.150/1A pt, 150/1Bpt, 1cpt,1D, 2pt, 3,4; 157/6, 7,8,9; 201/7Bpt, 8,9pt, 202/1pt 202/2; 204/1A, 1B, 2pt 7A,7B,8pt, 215/1, 2pt; 216/1,2,3;217/1pt,2pt மற்றும் 218/1pt -ல் 51,820 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனையில் Block Type 1 முதல்12 வரையில் மொத்தம் 46 Blocks -ல் தரைத்தளம் + 2 தளங்கள் மற்றும் தரைத்தளம் + முதல் தளம் கொண்ட தொகுப்பு குடியிருப்பு உபயோகக் கட்டுமாணம் கட்ட அனுமதி கோரி பார்வை 3-ல் சுட்டிய தங்களது கடிதத்துடன் பெறப்பட்டுள்ளது. மேற்படி உத்தேச கட்டுமாணம் அமையும் மனை ஒப்புதலுக்கான மனையிடத்திற்கு "Aமுதல் S" வரையில் என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில்,

Scanned by CamScanner

கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகள் /நிபந்தனைகளுக்குட்பட்டு, தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள் 1997 பிரிவு 25ன்படி கட்டட அனுமதி வழங்க இசைவு அளித்து உத்தரவிடப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1) பார்வை 4-ல் காணும் அரசாணையின்படி உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணமும் பார்வை 5-ல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி நன்னிலை வரியும் மனுதாரரிடமிருந்து பெற்றுக்கொண்ட பின்னரே மண்டல துணை இயக்குநர் அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

2) EIA Clearance சான்று பெற்றுக்கொண்ட பின்னரே ஊராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

3) கட்டட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இட அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள பொது உபயோக ஒதுக்கீடு திறவிடங்கள் மற்றும் அவற்றிற்கான அணுகுவழி ஆகியவற்றை தானமாக பத்திரப்பதிவு செய்து மனுதாரரால் சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். பத்திர நகல்கள் இவ்வலுவலகத்திற்கும் சம்பந்தப்பட்ட மண்டல துணை இயக்குநருக்கும் ஒரு வார காலத்திற்குள் அனுப்புதல் வேண்டும்.

4) பொது ஒதுக்கீடு திறவிடங்கள் மற்றும் அதற்கான அணுகுவழி ஆகியவற்றை நிறுவனத்தினர் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்கப்பட வேண்டும்.

5) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமாணங்கள் நடைபெறும் போது உத்தேச மனையிடத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

6) பொது ஒதுக்கீடு திறவிடங்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தானமாக பெற்றுக் கொண்டு, அதன் விபரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட மண்டல துணை இயக்குநர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

<u>நிபந்தனைகள்</u>

1) உத்தேச தொகுப்பு குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு Solar water Heating system அமைக்கப்பட வேண்டும்.

2) வரைபடத்தில் உத்தேக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.

3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.

4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலத்தின்முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகணங்க்ள் மூலம் வெளிவேற்றவும், குடியிருப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு

Scanned by CamScanner

கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

9) அரசாணை எண்.341/நநி மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி1) துறை, நாள் .3.11.04-ன் படி செப்டிக் டேங்கில் "U " Trap அமைத்தல் வேண்டும்.

10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட் டிருக்க வேண்டும்.

12) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்திரவு மற்றும் இவ்வாணையின் நகல் ஒவ்வொரு வீட்டையும் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.

முத்திரை இடப்பட்டஇசைவு அளிக்கும் வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப் படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) செங்கல்பட்டு மண்டலம் அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

ஒப்புதல் பெறப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை சான்றினை அனுப்புமாறு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)செங்கல்பட்டு மண்டலம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

நகர ஊரமைப்பு ஆணையருக்காக

இணைப்பு.
மூன்று தொகுப்பு வரைபடங்கள்

பெறுநர்
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
செங்கல்பட்டு மண்டலம்

நகல்
1) தலைவர்,
நல்லம்பாக்கம் முதல்நிலை ஊராட்சி
2) M/S Unitech Ltd
மேல்ரோஜாபுரம்
நெல்லிக்குப்பம் ரோடு
நல்லம்பாக்கம், சென்னை -48

ஆர்.எஸ்.9.10

Scanned by CamScanner

அனுப்புநர்
மீ.சங்கரேஸ்வரன், பி.இ.,
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ),
செங்கல்பட்டு மண்டலம்,
131.ஜி.எஸ்.டி ரோடு, செங்கல்பட்டு.

பெறுநர்
M/s.Unitech
மேல்ரோஸ்புரம்,
நெல்லிக்குப்பம் ரோடு,
நல்லம்பாக்கம், சென்னை— 48

ந.க.எண்.3839/2009/செம7 நாள்.05.01.2010.

அய்யா,

பொருள்: பலமாடி தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் — நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம் — காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், நல்லம்பாக்கம் முதல் நிலை ஊராட்சி மற்றும் கிராமம் — சர்வே எண்கள்.160/1ஏ(பு), 1பி(பு), 1சி(பு), 1பி, 2(பு) மற்றும் பலவற்றில் 51820 ச.மீ பரப்பளவில் அமையும் மனைக்கு மனை ஒப்புதல் மற்றும் Block Type 1 to 12 வரையில் மொத்தம் 46 Block —ல் 209 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு உபயோக கட்டிடம் கட்ட — இசைவு அளித்தது — பொது ஒதுக்கீடுகள் — சம்பந்தமாக.

பார்வை: 1] தலைவர், நல்லம்பாக்கம் முதல்நிலை ஊராட்சி அவர்களின் கடிதம் நாள். 9.10.09.
2] இவ்வலுவலகக் கடிதம் இதே எண் நாள். 4.11.09.
3] நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.22019/09/சிபி1, நாள். 8.12.09.

******

பார்வை 1—ல் கண்ட தங்கள் கடிதம் மூலம் பெறப்பட்ட தொகுப்பு குடியிருப்பு உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு, பார்வை 2—ல் கண்ட இவ்வலுவலக கடிதம் மூலம் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டு, பார்வை 3—ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் மூலம் தொகுப்பு குடியிருப்பு உபயோகக் கட்டிடம் கட்ட அனுமதி இசைவு பெறப்பட்டுள்ளது.

மேற்படி தொகுப்பு குடியிருப்பு உத்தேசத்தில் ஒதுக்கப்பட்டுள்ள பொது உபயோக பகுதி (ஓ.எஸ்.ஆர் 1 முதல் 4 முடிய) 5195.638 ச.மீ பரப்பளவு இடத்தினை ஊராட்சிக்கு தானமாக ஒப்படைத்த விவரம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒப்பம்) 5.1.2010

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ),
செங்கல்பட்டு

(ஒப்பம்) 5/1/010

நகல்
தலைவர்,
நல்லம்பாக்கம் முதல் நிலை ஊராட்சி,
வண்டலூர் (வழி), சென்னை— 48

Scanned by CamScanner



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate